Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 05, 2025

திங்கட்கிழமை 05, மே 2025 | ஒளி: 10 கதிர்: 231 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## ட்ரம்ப் பாப்பரசர்: நாலாபுறமும் எதிர்ப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பாப்பரசராகத் தோன்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு புகைப்படம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட இந்தப்

தொடர்ச்சி P2





## டோ லாமை சந்தித்தார் ஜனாதிபதி அனுர

வியட்நாமில் அமோக வரவேற்பு

வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் (CPV) மத்திய குழு தலைமையகத்தில் கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை (To Lam) ஞாயிற்றுக்கிழமை (04) மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2




# பகடிவதைக்கு முற்றுப்புள்ளி

புதிய மாணவர் பகடிவதைக்கு உட்படுத்துதல் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக ஆலோசனை பிரிவுகளை வலுப்படுத்த கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவிலும் இணைக்கப்பட்டு, இது தொடர்பாக பணியாற்ற ஒரு உறுப்பினர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

மேலும், சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவரின் மரணம் குறித்து முறையான விசாரணை தற்போது நடைபெற்று வருவதாகவும், பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகமும் இந்த மரணம் குறித்து விசாரணைகளை தொடங்கியுள்ளன.

## 2 சிறுமிகள் வன்புணர்வு: 2 வேட்பாளர்கள் கைது

19 வயது யுவதி மற்றும் 14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் இரு வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடு வீடாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, வீட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைந்தே இவ்வாறு 19 வயது யுவதி மீது வன்புணர்வில் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “வாக்குச் சீட்டில் செய்யக் கூடாதவை”



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதி பத்திரம் மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றை எடுத்து வரவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## உணவு பொதிகள் 50 ரூபாவால் அதிகரிப்பு

ஏ.எச்.ஏ.ஹுஸைன்

கிழக்கு மாகாண ஹோட்டல்களில் சில நாட்களாக விற்கப்படும் உணவுப் பொதிகளின் விலையையும் 50 ரூபாவினால் அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



## நாட்டுக்குள் ‘லொக்கு பெட்டி’

டி.கே.ஜி.கபில

தெற்கில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் ஒன்றின் தலைவரான ‘லொக்கு பெட்டி’ என்றழைக்கப்படும் லந்துவ ஹந்தி சுஜீவருவன் குமாரடி சில்வா, குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்பு அதிகாரிகள் குழுவால் பெலாரஸிலிருந்து துபாய் வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு, ஞாயிற்றுக்கிழமை (04) அன்று அழைத்து வரப்பட்டார்.

தொடர்ச்சி P2



## புது மருமகள் நீரில் மாயம்: மாமனார் சடலமாக மீட்பு

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கங்கேவாடி பகுதியில் சனிக்கிழமை (3) அன்று கலாஓயா ஆற்றில் குளிக்கச் சென்று, நீரில் அடித்துச் செல்லப்பட்ட தனது அண்மையில் திருமணமான மகளைக் காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்த தந்தை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

கடவுச்சீட்டு சேவையில்

## 3 நாட்கள் கட்டுப்பாடு

பொதுமக்களுக்கு கடவுச்சீட்டு வழங்குதல், ஒரு நாள் மற்றும் பொது சேவைகள் வழங்குதல் ஆகியவை மே 5, 6 மற்றும் 7ஆம் திகதிகளில் மட்டுப்படுத்தப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் (Luong Cuong) இன் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள காரணத்தால், 04 அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராகவும், டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கில் 5,941 ஏக்கரை அபகரிக்க வர்த்தமானி

விஜயரத்தினம் சரவணன்

வடக்கில் 5,941 ஏக்கர் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் வகையிலான வர்த்தமானி ஒன்றை அரசு வெளியீடு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், அரச தலைவர் அனுரகுமார திசாநாயக்க குறித்த வர்த்தமானியை மீள வாங்காமல் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ள கூடாது எனவும் அவர் இதன்போது மிகக்கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இல்லத்தில் 02.05.2025 குறித்த வர்தமானி மூலமான காணி அபகரிப்புத் தொடர்பான விடயங்கள் தொடர்பிலும், அதை எதிர்கொள்வதற்கான சட்ட ஆலோசனைகள் தொடர்பிலும் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவினரால் மக்களுக்கு தடதெளிவூட்டப்பட்டது.

இந்நிலையில் குறித்த தெளிவூட்டல் கலந்துரையாடலில் பங்கேற்றுக் கருத்து தெரிவிக்கும்போதே



எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்குரிய 5,941ஏக்கர் கரையோரப் பகுதி காணிகளை அரசு கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கடந்த 28.03.2025ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறித்த காணி அபகரிப்பு தொடர்பான அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, வலைஞர்மடம் உள்ளிட்ட பல்வேறு கரையோரப் பகுதிகளில் மொத்தம் 1,703 ஏக்கர் காணிகள் அபகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,669 ஏக்கர் காணிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 515ஏக்கர் காணிகளும், மன்னாரில் 54 ஏக்கர் காணிகளையும் அபகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இந்நிலையில் இவ்வாறு அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற காணி அபகரிப்பு முயற்சிக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதுடன், தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் குறித்த வர்த்தமானியை இலங்கை அரசு மீளக் வாங்குவதற்குரிய சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# டோ லாமை சந்தித்தார் ஜனாதிபதி அனுர

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான 55 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்து கொண்டார்.

வியட்நாமுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு, வியட்நாம் நோய் பாய் (Noi Bai International Airport) சர்வதேச விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் (Luong Cuong) இன் அழைப்பின் பேரில் வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டு சனிக்கிழமை (03) நாட்டிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, வியட்நாமின் நோய் பாய் சர்வதேச விமான நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை (04) முற்பகல் சென்றடைந்தார்.

அங்கு, ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும் வெளியுறவுத் துறை பிரதி அமைச்சருமான நுயென் மான் குவோங் (Nguyen Manh Cuong) உள்ளிட்ட அரச பிரதிநிதிகளால் அமோகமாக வரவேற்கப்பட்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டேம் (Trinh Thi Tam), வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் போசித பெரேரா மற்றும் இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவும் கலந்துகொண்டனர்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ கட்சியின் (CPV) மத்தியக் குழு தலைமையகத்தில் கம்யூனிஸ கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை ஞாயிற்றுக்கிழமை(04) பிற்பகல் சந்திக்க உள்ளார்.



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, வியட்நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களிலும், இன்று திங்கட்கிழமை (05) ஈடுபடவுள்ளார்.

ஹோ சி மிங் நகரில், மே 06ஆம் திகதி ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த விஜயத்தின் போது இரு தரப்பினருக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடவும், வர்த்தக சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அரச விஜயத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவும் இணைந்துகொண்டுள்ளது.

# ட்ரம்ப் பாப்பரசர்: நாலாபுறமும் எதிர்ப்பு

புகைப்படத்திற்காக அமெரிக்க ஜனாதிபதி விமர்சிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புகைப்படம் வெள்ளை மாளிகை ஊழியர்களின் சமூக ஊடகக் கணக்குகளில் பதிவேற்றப்பட்டது.

புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்குப் பிறகு புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்பட உள்ளார், மேலும் அது 7 ஆம் திகதி கார்டினல்களின் வாக்கெடுப்பு மூலம் நடைபெறும். இதை வத்திக்கான் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழலில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் ஆதரவாளர்கள் குழு ஒன்று இந்த புகைப்படத்தை உருவாக்கி, அவர் போப் பதவிக்கு பொருத்தமானவர் என்பதைக் குறிப்பிட்டு வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

போப்பாண்டவருக்கு ஏற்பட்ட அவமானத்தை சித்தரிக்கும் புகைப்படத்தை உருவாக்கி அதை சமூக ஊடகங்களில் பகிரங்கப்படுத்தியதாக டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்படம், டொனால்ட் டிரம்ப் போப் ஆக விரும்புவதாக வெளியிட்ட பொது அறிக்கையின் அடிப்படையில், டிரம்ப் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 5,941 ஏக்கரை அபகரிக்க வர்த்தமானி

அதன் ஒருகட்டமாக 02.04.2025 இரவுச முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களது இல்லத்தில் குறித்த காணி அபகரிப்பு விடயம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் உள்ளிட்டவர்கள் மக்களுக்குத் தெளிவூட்டப்பட்டதுடன், சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதன்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளக்கை வாங்காமல், அரச தலைவர் அனுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளக்கூடாது என மிகக் கடுமையாக எச்சரிக்கை விடுக்கின்றோம்.

அத்தோடு தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்து வந்த நிலங்களை ஒரு நொடியில் அரசநிலங்களாக மாற்றுவதற்குரிய செயற்பாடே இந்த வர்த்தமானி அறிவித்தலாகும்.

இவ்வாறு குறித்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆக்கிரமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் காணிகள் உள்ள தமிழ் மக்கள் உடனடியாக தமது காணிகளை உரிமை கோர வேண்டும்.

குறித்த பகுதிகளில் காணிகள் உள்ளவர்கள் புலம்பெயர்ந்திருப்பின் உடனடியாக வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து அக்காணிகளை உரிமை கோர வேண்டும். வெளிநாடுகளில் இருந்து வருகை தருவது கடினமாக இருப்பின், உடனடியாக அந்த காணி உரிமையை இங்குள்ள உறவினர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அரசகாணியாக்குவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. அதற்கு தமிழ் இங்குள்ள தமிழ் மக்களும் அனுமதிக்கக்கூடாது. அதேவேளை பெறும்பாலான தமிழ் மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாகத் தங்கியிருக்கின்றனர். குறிப்பாக பெறும்பாலான தமிழ் மக்கள் இந்தியாவிலும் அகதிகளாக தங்கியுள்ளனர். இவ்வாறு இங்குள்ள தமிழ் மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

இத்தகைய சூழல்கள் இருக்கும்போது தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் இவ்வாறு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டி இந்த வர்த்தமானியை மீளப் பெறவேண்டும் நீதிமன்றை நாடவுள்ளோம்.

மேலும் அரச தலைவர் அனுரகுமார திசாநாயக்கஇவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை அரசகாணிகளாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவிட்டு, கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலே 40 ஏக்கர் காணிகளை விடுவிப்பதாக ஒரு கண்துடைப்பு நாடகத்தை நடத்தியுள்ளார் என்றார்.

# பிரசாரத்தில் யுவதி வன்புணர்வு: வேட்பாளர் கைது

வளர்ந்து வரும் அரசியல் கட்சியொன்றிலிருந்து லக்கல பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சனிக்கிழமை (03) பிற்பகல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

தேர்தல் பிரசாரம் முடிவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பிரசாரத்தின் போது, பாலியல் வன்புணர்வு நடந்ததாக பொலிஸாருக்கு கிடைத்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 14 வயதும் ஆறு மாதங்களுமான சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் பசறை பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பசறை பொலிஸாருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 650 சுவரொட்டிகளை வைத்திருந்த இரண்டு உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் பொலிஸ் காவலில் எடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டதாக லக்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 3 நாட்கள் கட்டுப்பாடு

ஒரு நாள் சேவைக்காக இயக்கப்பட்ட 24 மணி நேர சேவை மேற்கூறிய நாட்களில் இயங்காது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மேலும் கூறுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகள் காரணமாகவே இந்த சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நாட்டுக்குள் 'லொக்கு பெட்டி'

அவர் அஹுங்கல்ல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர், ஒரு காலத்தில் இலங்கை இராணுவத்தின் 7ஆவது படைப்பிரிவில் பணியாற்றியவர்.

கிளப் வசந்த கொலை, கொலைகள், துப்பாக்கிச் சூடு, குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட ஏராளமான குற்றங்களுக்காக அவர் மீது இந்த நாட்டின் நீதிமன்றங்களில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அவர், பெலாரஸிலிருந்து துபாய் சர்வதேச விமானநிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து, ஞாயிற்றுக்கிழமை (04) காலை 7.48 மணிக்கு ஃப்ளைடுபாய் FZ-579 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார்.

அவரிடமிருந்துவாக்குமூலம்பதிவுசெய்தபின்னர், கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் அவரை நுகேகொடையில் உள்ள மேற்கு தெற்கு குற்றப் பிரிவுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# உணவு பொதிகள் 50 ரூபாவால் அதிகரிப்பு

மலையகத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு விற்கப்படும் மரக்கறிகளின் விலைகள் மலையளவு உயர்ந்துள்ளதே இவ்வாறு தாம் உணவுப் பொதிகளின் விலையை அதிகரித்தமைக்குக் காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக பிரைட் ரைஸ் தயாரிப்பதற்குச் சேர்க்கப்படும் லீக்ஸ், கரட், தக்காளி, போஞ்சி, கோவா உள்ளிட்ட மரக்கறிகள் உட்பட கறிகளுக்குத் தேவையான ஏனைய பீட்ரூட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட மரக்கறிகள் ஒரு கிலோ கிராம் ஆயிரம் ரூபாவை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே இஞ்சி, புளி, மாசி, உள்ளிட்ட கறிக்குத் தேவையான

> **இதனால், சாதாரண ஏழைகள் ஒருவேளை உணவைத் தயாரிப்பதற்காக சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்**

பொருட்கள் கிலோ கிராம் 3,000 ஆயிரம் ரூபாய், தேங்காய் ஒன்று 300, உப்பு ஒரு கிலோ கிராம் 400, மரக்கறி எண்ணெய் ஒரு லீற்றர் 1,000 ரூபாய் என்றவாறு உச்சத்தைத் தொட்டுள்ள நிலையில் இப்பொழுது மரக்கறிகளின் விலையும் மலையளவு உயர்ந்துள்ளன.

இதனால், சாதாரண ஏழைகள் ஒருவேளை உணவைத் தயாரிப்பதற்காக சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

# புது மருமகள் நீரில் மாயம்: மாமனார் சடலமாக மீட்பு

புத்தளம் - கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த முஹம்மட் பரீன் (வயது 42) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், திருமணமாகி 20 நாட்களேயான, கற்பிட்டி வன்னி முந்தல், முகம்மதியா புரம் பகுதியைச் சேர்ந்த பாத்திமா அப்சானா (வயது 22) எனும் யுவதியே காணாமல் போயுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கலா ஓயா ஆற்றின் நீர்மட்டம் ஒரே தடவையில் அதிகரித்துள்ளமை இந்த அனர்த்தத்திற்கு காரணமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

தமது குடும்பம் மற்றும் உறவினர்கள் என 8 பேருடன் இயந்திரப் படகு ஒன்றில் கற்பிட்டியில் இருந்து வன்னாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கங்கேவாடி பகுதியில் உள்ள ஆற்றுக்கு குளிப்பதற்காகச் சென்றுள்ளனர் .

இதன்போது, உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் மகளும், அவரின் உறவினர் முறையை சேர்ந்த 22 வயதுடைய அண்மையில் திருமணமான யுவதியும் ஆற்றுக்குள் நீராடிக் கொண்டிருந்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

நீராடிக் கொண்டிருந்த இளம் யுவதியை நீர் அடித்துச் செல்லப்படுவதாக அங்கிருந்தவர்கள் கூக்குரலிட்டுள்ளனர். இதனை அவதானித்த தந்தை உடனடியாக ஆற்றுக்குள் பாய்ந்து நீரில் இழுத்துச் செல்லப்பட்ட தனது மகளைப் பாதுகாப்பான முறையில் மீட்டுள்ளார்.

இதையடுத்து, தனது மகளோடு கூடவே இருந்து நீராடிக் கொண்டிருந்த அண்மையில் திருமணமான தனது உறவுமுறை யுவதியும் காணாமல் போயுள்ளமையை அவதானித்த அந்த குடும்பஸ்தர் மீண்டும் ஆற்றுக்குள் பாய்ந்த நிலையில் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதையடுத்து, அங்கிருந்தவர்கள் நீரில் மூழ்கிய குடும்பஸ்தரை மீட்டு, உடனடியாக வன்னாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி வன்னாத்தவில்லு பொலிஸாருக்கும், புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், சம்பவ இடத்தில் மரண விசாரணையை முன்னெடுத்ததுடன், வன்னாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஜனாஸாவை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, உயிரிழந்த நபரின் ஜனாஸா பிரேதப் பரிசோதனையின் பின்னர், நீரில் மூழ்கியமையினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பு வழங்கி உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நீரில் அடித்துச் செல்லப்பட்டு, காணாமல் போயுள்ள யுவதியைத் தேடும் பணிகள் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கடற்படையினர், பொலிஸாருடன் இணைந்து, இயந்திர படகுகளில் மீனவர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# "வாக்குச் சீட்டில் செய்யக் கூடாதவை"

வாக்களிப்புக்கான தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அலுவலக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பம் செய்தமைக்கான பிரதி ஆகியவற்றை எடுத்து வரவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சிகளின் சின்னங்களும் சுயேச்சைக்குழுக்களின் பெயர்களுக்கு எதிரே சுயேச்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும், அதற்கு எதிராக வெற்றுக்கட்டம் இருக்கும், அதில் புள்ளடி (X) இடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால், ஞாயிற்றுக்கிழமை (04) மாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒலிப்பதிவில், உரையாற்றி உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, வாக்குச்சீட்டில் எழுதவோ, சித்திரம் கீறவோ, கிறுக்கவோ, எண்ணங்களை எழுதவோ, பெயர்களை எழுதவோ வேண்டாம். புள்ளடி (X) இடப்படாத எந்தவொரு வாக்குச்சீட்டும் நிராகரிக்கப்படும் என்றார்.















## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

# 17ஆவது பட்டமளிப்பு விழா

■ நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம்.ஹனீபா

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் சனிக்கிழமை (03) அன்று நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, மற்றும் ஞாயிறு இரு தினங்களாக நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி யும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும் பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழில்நுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை கலாச்சார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல். வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரீ.வேல்நம்பியும் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் (FAC & FMC) 687 மாணவர்களுமாக 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

### போக்குவரத்து திணைக்களத்தில்

# ஊழலை ஒழிக்கும் திட்டம்

மோட்டார் போக்குவரத்து திணைக்கள நிறுவனத்திற்குள் ஊழலை ஒழிக்கும் நோக்கில் ஒரு புதிய இலஞ்ச ஒழிப்பு முயற்சியைத் தொடங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்தார்.

சமூக ஊடகங்களில் சனிக்கிழமை (3) அன்று வெளியிட்ட குறிப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும், இலஞ்சத்திற்கு எதிரான சகிப்புத்தன்மை கொள்கையை வலியுறுத்தும் இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, DMT வளாகங்களில் சில வாரங்களுக்குள் சி.சி.ரி.வி. கெமராக்கள் நிறுவப்படும் என்பதைவும் அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

சில மாதங்களுக்குள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் உள்ள இந்த இலஞ்சப் புற்றுநோயை ஒழிக்க குடிமக்களும் தூய்மையான அதிகாரிகளும் அரசாங்கத்துடன் கைகோர்த்துப் போராடுவார்கள் என்று நம்புகிறேன் என்றும் கூறினார்.

இந்த முயற்சி வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தும் என்றும், நீண்ட காலமாக ஊழல் குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் விபத்து

■ எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார்-யாழ். பிரதானவீதி,கள்ளியடி பகுதியில் சனிக்கிழமை (3) அன்று காலை இடம்பெற்ற கோர விபத்தில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரில் உள்ளஆடைதொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றிவந்த தனியார் பேருந்து கள்ளியடி பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதன் போது குறித்த பேருந்துக்கு நேர் எதிரே அதிவேகமாக வந்த ஹென்டனர் ரகவாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மோதி குறித்த வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டிருந்த ஒருவர் மீது மோதி பாரிய விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிலில் நின்ற நபரும் காயமடைந்ததுடன்,அவரது மோட்டார் சைக்கிலும் பலத்த சேதமடைந்துள்ளது. குறித்த விபத்தில் ஹென்டனர் ரக வாகனத்தின் சாரதி,உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், ஆடை தொழிற்சாலை பணியாளர்கள் 09 பேரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# 4,150 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு செவ்வாய்க்கிழமை (06) காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவிருக்கும் நிலையில், சுமார் 4,150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறியமை தொடர்பில், மார்ச் 20ஆம் திகதி முதல், மே. 02ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அந்த முறைப்பாடுகளில், 3,495 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும், 655 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# இராட்சத யானைத் திருக்கை மீன்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு - முகத்துவாரம் ஆழ் கடலில் ஞாயிற்றுக்கிழமை(04) இராட்சத யானைத்திருக்கை மீன் பிடிக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

வலையில் சிக்கிய மீனைக் கரைக்கு இழுத்து வர முடியாமல் நீண்ட நேரமாக மீனவர்கள் கடும் சிரத்தைப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

குறித்த யானைத் திருக்கை மீனின் எடை 300 கிலோ கிராமுக்கும் அதிகமாகும்.

இந்த மீன், சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மின்னல் தாக்கத்தால் வாகனத்திற்கு சேதம்

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா- பிரவுன்ஸ்வீக் தோட்த்தின் புளூம்பீல்ட் பிரிவில் சனிக்கிழமை (03) மாலை ஏற்பட்ட இடி மின்னலுடனான காலநிலை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் பால் சேகரிப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது மரக்கிளை ஒன்று முறிந்து விழுந்து வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த முன் கண்ணாடி முற்றாக சேதமடைந்துள்ளது.

இதன் காரணமாக இந்த இரு தினங்களாக பால் சேகரிப்பு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் சாரதி தெரிவித்துள்ளார். குறித்த வாகனம் பால் சேகரிப்பதற்காக வராத நிலையில் தாம் பசுக்களில் எடுத்த பால் வீண் விரயமானதாக குறித்த பகுதியில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## சிறு விளம்பரங்கள்

கொழும்பு-03 இல் உள்ள அலுவலகத்துக்கு, சந்தைப்படுத்தல் நிர்வாகிகள், காசாளர் உதவி கணக்காளர், வார்ஃப் குமஸ்தா, பயிற்சி பெறுபவர்கள். முழு மற்றும் பகுதி நேரமாக விண்ணப்பிக்கவும் afa.wexp@yahoo.com தொடர்பு கொள்ளவும்: 011-234 2807

---

எலக்ட்ரிக் டாடா பஞ்ச் EV எம்பவர்டு பிளஸ் SLR ACFC பதிவு செய்யப்படாதது, முன்னாள் ஸ்டாக், RED விற்பனைக்கு. முகவர்களின் உத்தரவாதத்துடன் கூடிய DEMO இல் பார்க்கலாம். ரூ.13.2 மில்லியன் தொடர்பு கொள்ளவும். 071-272 4403

---

பமுனுகம, எபமுல்ல, பிடிபன வீதியில் கடற்கரை வீதி மற்றும் ஹாமில்டன் கால்வாயை எதிர்கொள்ளும் வகையில் 66 பேர்ச் உள்ளது தொடர்பு கொள்ளவும். 071-272 4403, 076-140 8473

---

12 பேர்ச் ,அதுருகிரிய, தல்டியாவல ப்ரூக்லேண்ட் எஸ்டேட் டெவலப்பரால் ஆக்சஸ் குழுமத்தால் உருவாக்கப்பட்டுள்ளது, அதுருகிரிய அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு சுமார் 02 கி.மீ. தொலைவில் உள்ளது. 071-272 4403, 076-140 8473 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.

உலக ஊடக சுதந்திர தினம் 2025

## டிஜிட்டல் யுகத்தில் செயற்கை நுண்ணறிவும் ஊடக ஒருமைப்பாடும்



#BraveNewMedia

செயற்கை நுண்ணறிவு (AI) ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் அதேவேளை, வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் தவறான தகவல்களை எதிர்ப்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. டிஜிட்டல் சகாப்தத்தில் உண்மையைப் பாதுகாக்க செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஒழுங்குமுறைக்கும் ஊடக ஒருமைப்பாட்டிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துவது அவசியம்.

செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்துவோம். ஊடக நெறிமுறைகளை பாதுகாப்போம். ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்துவோம்.

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute
NSSL
TEGOSL
FMM Sri Lanka சுதந்திர ஊடக இயக்கம் Free Media Movement
SLWJA

# மாணவ, மாணவிகள் மீதான உள, உடலியல் துன்புறுத்தல்

பாடசாலை, பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மீதான உள, உடலியல் ரீதியான துன்புறுத்தும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இதனால், கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகிய மாணவர்கள் தங்களுடைய உயிரை மாய்த்துக்கொண்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான துன்புறுத்தலுக்கு பொறுப்பானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன், வழங்கப்படும் தண்டனைகள் எதிர்கால மாணவ சமூகத்துக்கும் ஆசிரியர் குழாத்துக்கும் தக்க பாடமாக அமையவேண்டும்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனை, நிர்வாணப்படுத்தி பகடிவதைக்கு உட்படுத்தியமையால், அந்த மாணவன் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பெற்றோரின் கடுமையான உழைப்பு, கஷ்டங்களுக்கு மத்தியில் கற்று முன்னேற வேண்டும் என்ற பெரிய கனவுடன் பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் மாணவர்கள், பகிடிக்கு பயந்து இடைநடுவிலேயே கல்வியைக் கைவிட்டு விடுகின்றனர். இல்லையேல் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி, தப்பான முடிவை எடுத்து விடுகின்றனர்.

பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்களுக்கு அறிமுக விழாவைச் செய்தால் போதுமானது. அவர்களை மன உளைச்சலுக்கும், உடலியல் ரீதியாகத் தண்டிக்கவும் எவருக்கும் உரிமையில்லை என்பதை, ஆரம்பத்தில் இருந்தே கற்பிக்கவேண்டும்.

இதற்கிடையே கொழும்பில் உள்ள பிரபல தமிழ் பாடசாலையில் தரம் 11இல் கல்விப் பயிலும் மாணவியொருவர், உயரமான மாடியில் இருந்து கீழே விழுந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். தான் பயின்ற பாடசாலையில், கணிதப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் அந்த மாணவியை பாலியல் ரீதியில் சீண்டியுள்ளார்.

அதற்கெதிராக பாடசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும், அந்த மாணவிக்கு நியாயம் கிடைக்கவில்லை. இதனையடுத்து. அம்மாணவி விடுகை பத்திரத்தைப் பெற்று வேறொரு பாடசாலையில் சேர்ந்துள்ளார்.

ஏற்கெனவே பாலியல் ரீதியில் சீண்டிய கணிதப்பாட ஆசிரியரின், நண்பரொருவர், மாணவி புதிதாகச் சேர்ந்த பாடசாலையில் கற்பிக்கின்றார். இவர், அந்த மாணவியை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் வகையில், மனநலம் பாதிக்கப்பட்டவர் என திட்டித்தீர்த்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்தே, கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளான மாணவி, தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இதற்கு பாடசாலை சமூகமும் முழுமையான பொறுப்பே ஏற்கவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட கணித பாட ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், மாணவியை அநியாயமாக இழந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

மாறாக, குற்றஞ்சாட்டிய மாணவியை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் வகையில், பாடசாலை சமூகமும் ஒரு சில ஆசிரியர்களும் நடந்துகொண்ட விதம் கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டும். ஆகையால், எதிர்காலத்திலாவது இவ்வாறான வன்மங்களைக் கக்குவோரிடம் இருந்து மிகக்கவனமாக தங்களுடைய பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருடையது.

அதேபோல, குற்றச்சாட்டுகளை விசாரணைக்கு உட்படுத்தி, சமூகத்துக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கும் வகையில், தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவேண்டியது அதிகாரமிக்கவர்களின் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சந்தோஷங்கள் என்பன இரண்டு வகைகளில் வந்து சேர்வதாக அமைகின்றன. ஒன்று புறஉலகினூடாக வருவது. மற்றையது, தன்னுள் வியாபித்துப் பிரகாசிப்பது ஆகும்.

புற உலகில் எப்படிச் சந்தோஷங்களை அனுபவிக்கின்றோம் என்பதை ஆராய்வோம்? எம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள், இயற்கை வழங்கும் கொடைகளாகும்.

மனிதரை மட்டும் நோக்காது, பரந்த வானம், பச்சைப் பசேல் எனக் காணப்படும் விருட்சங்கள் காடுகள், மலைகள் இவற்றுடன் மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன என அனைத்தும் எம்மை அசத்தும் உயிரினங்களாகும். இறைவன் படைத்தவைகளை இரசித்தால் அதுவே, பேரின்பம் ஆகும்.

அடுத்து, தன்னுள் இருந்து பிரகாசிக்கும் களிப்பு, எப்படி முகிழ்கின்றது என்பதை விவரிக்க முடியாத, யோக நிலையாகும். மனப்பக்குவம் உள்ளோர், தமக்குள்ளே எல்லையற்ற பரம் பொருளூடாக, இதயத்துக்குள் சந்தோஷத்தை அனுபவித்த வண்ணம் இருக்கின்றார்கள்

கோபம், குரோதம், பொறாமை இல்லாமல், மனதை நிர்மலமாக்கினால், அகத்துக்குள் இறைவனை நிறுத்திப் பேரானந்தம் பெறலாம். இது நிச்சயமானது.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### அழகிய சூழலை அழிக்கும் வியாபாரிகள்

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் வசந்த கால நிகழ்வுக்காக நுவரெலியா நகரத்தின் நடைபாதைகளில் தற்காலிக கடைகள் அமைத்தவர்கள் நுவரெலியாவின் அழகிய சூழலை அழிப்பதாக நுவரெலியா மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

2025 வசந்த கால நிகழ்வுகள் நுவரெலியா நகராட்சி மன்றத்தால் ஏப்ரல் 1 முதல் 21 வரை நடத்தப்பட்டது.

இதற்காக வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு தற்காலிக கடைகள் கட்டவும், வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நகராட்சி மன்றம் ஏப்ரல் 30, 2025 வரை அனுமதி அளித்திருந்தது.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு, நுவரெலியா, தர்மபால சுற்று பகுதியிலிருந்து நுவரெலியா கோல்ஃப் மைதானம் வரை உள்ள நடைபாதையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகளை அகற்றப்பட்ட போதும் பொலித்தீன் உள்ளிட்ட திடக்கழிவுகளை விற்பனையாளர்கள், நுவரெலியா நடைபாதையிலேயே விட்டுச் சென்றுள்ளதை அவதானிக்க முடிந்தது . இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

- ரஞ்சித் ராஜபக்ஷ

# புதிதாக தொடங்கிய பிரச்சினை

**லக்ஸ்மன்**

உள்ளூராட்சித் தேர்தல் அமைதிக் காலம் நடைமுறையில் இருக்கிறது. இருந்தாலும், இறுதி நேரத்தில் கூட சிலர் சமூக வலைத்தளங்கள் ஊடாக தங்கள் பிரசாரங்களை செய்து வருகின்றனர். நாளை நடைபெற உள்ள தேர்தல் ஒரு முக்கியமான தேர்தலாக அரசியல் கட்சிகளால் கருத்துக்கள் பகிரப்படுகின்றன. அதில் மாற்றுக் கருத்து இல்லையானாலும், தேசிய கட்சிகள் முதல், பிராந்திய, பிரதேச, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் கூட மக்களை தம் பக்கம் ஈர்ப்பதற்காக ஏமாற்றும் வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். எப்படியானாலும், உள்ளூராட்சித் தேர்தல் சூடுபிடித்திருக்கிறது.

தையிட்டியில் இருந்து இன்னமும் விடுபடாதிருந்து கொண்டிருக்கையில் புதிதாக ஒரு பிரச்சினை வடக்கில் உருவாகியிருக்கிறது. வடமாராட்சி - மருதங்கேணியில் இருந்து முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் வரை 6,000 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிக்கும் திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. இது வடக்கில் மாத்திரமல்ல புலம்பெயர் தேசங்களிலும் பெரும் பிரச்சினையாக மாறியிருக்கிறது. நில அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, மொழியுரிமை, கல்விப் பங்கீடு என ஆரம்பித்த விடயங்களிலேயே இனப் பிரச்சினை தோற்றம் பெற்றது. இப்போதும் அது தொடர்கிறது.

இலங்கையில் ஒவ்வொரு ஜனாதிபதியும் ஒவ்வொரு முகத்துடன் ஆட்சிக்கு வருவது தான் நடைபெறுகிறது. இனவாதமற்ற தோற்றத்துடன், இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தனியாகப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைச் சிங்கள பெரும்பான்மை அரசுகளும், அடிப்படைவாதிகளும் ஏற்றுக் கொள்ளத் தவறியே இருக்கின்றன. கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் தொல்பொருள் செயலணி நிறுவினார். அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் இன்னமும் வடக்குக் கிழக்கில் முடிவுக்கு வரவில்லை. அந்தக் குழு செயற்பாட்டில் இல்லையானாலும் இப்போதும் தொல்பொருள் என்ற பெயரில் தமிழ் மக்களுடைய பிரதேசங்களில் நெருக்குதல்கள் தொடர்ந்து வண்ணமிருக்கின்றன.

இந்த நிலையில், இப்போது இந்த அரசாங்கம் இவ்வாறானதொரு காணிகளைச் சுவீகரிக்கும் திட்டத்தை வெளியிட்டிருப்பது வடக்கு மக்களை மாத்திரமல்ல கிழக்கு மக்களையும் சிந்திக்க வைத்திருக்கிறது. இவ்விடயத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து குரல் கொடுத்து வருகின்றன என்பது பாராட்டத்தக்கது. வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் புலம்பெயர்வு, இடம் பெயர்வும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. அதே நேரத்தில், யுத்த மௌனிப்புக்குப் பின்னரும் பொருளாதாரக் காரணங்களால் பலரும் புலம் பெயர்ந்து வருகின்றனர். காணி சுவீகரிப்பு திட்டங்கள் இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்றிருந்தாலும் இப்போது வடக்கில் அறிவிக்கப்பட்டிருக்கும் காணிகளை உரிமை கோருங்கள் என்கிற அறிவிப்பும் ஒரு வகை சுவீகரிப்பாகவே பார்க்கப்படுகிறது. இது நடைபெற்றால் பலவிதமான ஆபத்துக்கள் ஏற்படலாம். குறிப்பாக பொருளாதார, உற்பத்தி சார் காரணங்கள் காண்பிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறலாம். அது இனப் பரம்பலில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

வடக்கிலிருந்து வெளியேறிய சிங்கள மக்களைக் குடியேற்றுதல், அவர்களுடைய காணிகளை அடையாளம் காணுதல் போன்றவற்றுக்கு எதிரான செயற்பாடுகள் போலவே இந்த காணி தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானியும் தமிழர்களுக்குள் செயற்பாட்டைச் செய்ய வேண்டும். அவ்வாறில்லை. ஆனால், மிகப் பெரும் ஆபத்து ஏற்படலாம் என்பது பலரது கருத்தாக இருக்கிறது.

தமிழர்கள் வடக்கு- கிழக்கை தங்கள் பாரம்பரிய தாயகமாக வரித்துக் கொண்டு வாழுதலைத் தடுக்கும் வகையிலான வேலைப்பாடுகளைக் காலங்காலமாகத் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையினர் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். ஒரு தேசிய இனத்தின் வாழும் நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் போன்றவற்றைச் சிதைப்பதன் மூலம் அந்த இனத்தினை ஏதுமற்றவர்களாக ஆக்குதல் என்பது இலங்கையின் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி.) தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி ஏதோ தமிழர்களுக்கு மீட்பைத் தரப்போவதாகத் தான் ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வாக்களித்தனர். சிங்கள மக்களது பார்வை வேறுவிதமாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தியின் ஆறு மாத கால ஆட்சியில் நாட்டின் வடக்கு கிழக்கு மக்களது பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி நேரடியாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. அவரது பேச்சுக்கள் எல்லாம் பொதுவானவைகளாகவே இருந்து வருகின்றன. தமிழ் மக்களுக்கு விசேடமான ஒரு பிரச்சினையும் இல்லை என்பது அவருடைய நிலைப்பாடு.

> **தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையை அங்கீகரிப்பதற்கோ, சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பதற்கோ அதனை அங்கீகரிக்கும் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குவதற்கோ தயாரில்லாத இலங்கை அரசாங்கத்திடம் நாம் ஒருபோதும் தமிழ் மக்கள் நலன் சார் ஏதையும் ஏதிர்பார்க்க முடியாது என்பதற்கு வர்த்தமானியை உதாரணமாகக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை**

இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது. ஏனைய இனங்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்து விட்டுப் போகலாம். ஆனால் ஒரு தேசிய இனமாக இருக்க முடியாது என்பது இலங்கையில் எழுதப்படாததொரு விதியாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த விதியில் ஆட்சி பீடத்துக்கு வரும் யாரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. என்பதற்கு அனுரகுமார திசாநாயக்கவும் விதிவிலக்கானவரல்ல. ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால், அந்த தேசிய இனத்தின் வாழும் நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றில் நெருக்குதல்களை, அழிப்புகளை மேற்கொண்டால் போதுமானது என்பது உலக வரலாறுகளின் பாடமாக இருக்கிறது. இது இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெறுகிறது என்பதற்கு நில ஆக்கிரமிப்புகள் சிறந்த உதாரணமாகும்.

ஒரு தேசிய இனமாக வாழ்வதற்குத் தமிழர்கள் விரும்பினாலும், இலங்கையர்களாக வாழுங்கள் என்று சொல்லும் தேசிய மக்கள் சக்தி அதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை என்பது மாத்திரம் உறுதியானது. நாட்டின் பல்வேறு சிக்கல்களுக்கு, நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்கும் இனப் பிரச்சினையாக காரணம் என்பதும், அதற்கான தீர்வு எவ்வாறு இருக்க வேண்டும், அதை எவ்வாறு வழங்குவது என்பதனைப் பற்றி அரசாங்கம் சிந்திப்பதாக இல்லை. திட்டமிட்ட வகையில் வேலைப்பாடுகளை மேற்கொள்வதில் கவனங்கள் செலுத்தப்படுகின்றன.

கோட்பாட்டு அடிப்படையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்குத் தயாரில்லாத நிலையில் அரசியலமைப்புத் திருத்தம் என்ற பெயரில் விடுக்கப்பட்ட அறிவிப்பு இன்னும் எதையும் கொண்டு வரவில்லை. முன்னரே பலரும் சொன்னது போல, அரசியலமைப்புத் திருத்தமானது 13ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்கள் கூடு உள்வாங்கப்படாத வெறுமனே ஒரு கண்துடைப்பானதொன்றாகவே இருக்கப் போகின்றது. ஆனால், வாழும் நிலம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் ஆகிய நான்கு விடயங்களும் அற்றதாக வடக்கு கிழக்கு மக்களின் பாரம்பரிய விடயங்கள் மறைக்கப்பட்டதாகக் கொண்டுவரப்படும் தீர்வுகள் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தப் போவதில்லை என்பதற்கு அப்பால் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அவ்வாறானால், தொடர்ந்தும் இனப் பிரச்சினை தொடர்ந்த வண்ணமே இருக்க போகிறது என்பது மாத்திரமே உண்மையாகும். தற்போது நடைபெற்றிருக்கின்ற வர்த்தமானி வெளியீடானது, தற்போதைய ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் நல்லெண்ண செயற்பாடாக அல்லாமல் அவர்களுடைய உண்மை முகத்தை மக்களுக்கு காண்பிப்பதாகக்கொள்ள முடியும்.

வடக்கு கிழக்கைப் பாரம்பரிய தாயகமாக கொள்ளும் தமிழ் மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமைக்காகத் தன்னாட்சியை எதிர்பார்த்தனர். அதற்காக மேற்கொண்ட சாத்வீகப் போராட்டங்கள் பயனற்றுப் போனமையானது ஆயுத யுத்தத்தைத் தோற்றுவித்தது. அந்த ஆயுத யுத்தமானது பல்வேறு திசைகளிலும் சென்று 2019 மே 18 உடன் முள்ளிவாய்க்காலில் புதைந்து போனது.

இப்போது மே 18 நெருங்கிக் கொண்டிருக்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுகிறது. வடக்கின் முக்கியமான பெரும் நிலப்பரப்பை இலக்கு வைத்து ஒரு வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கிறது. வெளிப்பூச்சுக்கு ஒரு முகமும் உள்ளே மிகக் கோரமான ஒரு முகத்துடனும் செயல்படும் அரசாங்கமாகத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தன்னைப் பதிவு செய்வதாக இதனைக்கொள்ள முடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையை அங்கீகரிப்பதற்கோ, சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பதற்கோ அதனை அங்கீகரிக்கும் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குவதற்கோ தயாரில்லாத இலங்கை அரசாங்கத்திடம் நாம் ஒருபோதும் தமிழ் மக்கள் நலன் சார் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதற்கு வர்த்தமானியை உதாரணமாகக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பத்தோடு பதினொன்று என்று திருப்திப்பட்டுக் கொள்வோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அமைதிக் காலத்தை வர்த்தமானி அறிவித்தல் பற்றிச் சிந்திப்பதற்கும் பயன்படுத்துவோம்.

## யூனியன் வங்கி ரூ. 285 மில்லியனை

# வரிக்கு முந்திய இலாபமாக பதிவு



யூனியன் வங்கி, 2025 மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், உறுதியான கடன் வளர்ச்சி மற்றும் ஐந்தொகை விரிவாக்கம் போன்றவற்றை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

மூலோபாய நோக்கு மற்றும் மீட்சி ஆகியவற்றை வெளிப்படுத்தி தேறிய கடன்களில் 14% வருடாந்த வளர்ச்சியை யூனியன் வங்கி பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக, கடன் வழங்கல் மற்றும் சில்லறை, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் கூட்டாண்மை துறைகள் போன்றவற்றுக்கு ஆதரவளிக்கும் அதன் அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நிதிச் சேவைகள் துறையில் வங்கியின் உறுதியான நிலையை வெளிப்படுத்துவதாக ஆரோக்கியமான கடன் வளர்ச்சி அமைந்துள்ளது. இந்த கடன் வழங்கல் போக்கை பிரதிபலித்து, வங்கியின் மொத்த சொத்துகள் ரூ.161 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2024 டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 10% அதிகரிப்பாகும். வங்கியின் நிதி வசதியளிப்ப இருப்பை பிரதிபலித்து வைப்புகள் 2% இனால் உயர்ந்து ரூ.106 பில்லியனாக வளர்ச்சியடைந்திருந்தது. சொத்துக்களின் தரம் முன்னேற்றமடைந்து, நிலை 3 மதிப்பிறக்க விகிதம், முன்னைய ஆண்டின் நிறைவில் பதிவாகியிருந்த 12.26% இலிருந்து 11.0% ஆக குறைந்திருந்தது. அதனூடாக, வங்கியின் உறுதியான மீட்சி நோக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வங்கி தொடர்ச்சியாக தனது மூலதன போதுமை விகிதத்தை 14.33% ஆக பேணியிருந்தது.

தேறிய தொழிற்பாட்டு வருமானம் வருடாந்த அடிப்படையில் 11% இனால் உயர்ந்து ரூ.1.75 பில்லியாக பதிவாகியிருந்தது. இதில், மேம்பட்டிருந்த சொத்தின் தரம் மற்றும் வினைத்திறனான இடர் முகாமைத்துவம் போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் 3% இனால் உயர்வடைந்து ரூ.284 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில் டிஜிட்டல் வங்கியியல், கார்ட் சேவைகள் மற்றும் வர்த்தக-தொடர்புடைய செயற்பாடுகள் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி பங்களிப்புச் செய்திருந்தன. நிகர வருமானம் மற்றும் தேறிய வட்டி வருமானம் ஆகியன மாற்றமடையும் சந்தை சூழல்கள் மற்றும் வட்டி வீத நகர்வுகள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், வங்கியின் வருமான நிலை ஆரோக்கியமானதாகவும் மூலோபாய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்டதாகவும் அமைந்திருந்தது. வங்கியின் மட்டத்தில் ரூ.285 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாக யூனியன் வங்கி பதிவு செய்திருந்தது. வருமான அழுத்தங்கள் மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு விரிவாக்கம் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் காணப்பட்ட போதிலும், வருமான உறுதித்தன்மையை பேணியிருந்தது.

குழும மட்டத்தில், யூனியன் வங்கிக் குழுமம் ரூ.329 மில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகவும், குழுமத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 171 பில்லியனையும் பதிவு செய்திருந்தன. யூனியன் வங்கிக் குழுமத்தில் 95% ஆன பங்கை யூனியன் வங்கி கொண்டிருப்பதுடன், குழுமத்தில் துணை நிறுவனங்களான நஷனல் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட் மற்றும் UB ஃபினான்ஸ் பிஎல்சி போன்றன அடங்கியுள்ளன. இவை, குழுமத்தின் திரண்ட செயற்திறன் மற்றும் மூலோபாய பன்முகப்படுத்தல் போன்றவற்றில் பங்களிப்புச் செய்யும்.

வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில் Video KYC (VKYC) வசதியை வங்கி தனது டிஜிட்டல் மயமாக்கல் பயணத்தின் அங்கமாக அறிமுகம் செய்துள்ளது. மேலும், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை மற்றும் நிதிசார் உள்ளடக்கம் ஆகியவற்றுக்கான வங்கியின் அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், 'Power HER' பிரிவு அமைந்துள்ளது. இலங்கையின் முதலாவது பெண்களுக்காக வங்கியியல் பிரிவாக அமைந்திருப்பதுடன், அவர்களுக்கு இலவச, முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட பண முகாமைத்துவ தீர்வை இது வழங்குகிறது. மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தேசிய புத்தாக்க முகவர் அமைப்பு (NIA) ஆகியவற்றுடன் இணைந்து முதலாவது தேசிய தொழில்முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## Prime Residencies மூலம்

# 'Tower Amari' அறிமுகம்

Prime Lands Residencies PLC, தனது Colombo Border திட்டத்தின் மூன்றாவதும், இறுதி அங்கமுமாக 'Tower Amari'ஐ அறிமுகம் செய்துள்ளது.

இந்த அறிவித்தலினூடாக, Prime Residencies இன் நகர வசிப்பிட தொகுதி பூர்த்தியடையவுள்ளதுடன், சொகுசான நகரபுற வசிப்பிட நியமங்களை மாற்றியமைக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

Tower Amari வெற்றிகரமான அடிக்கல் நாட்டல் மற்றும் திட்டத்தின் முன்னைய கட்டங்களின் நிர்மாண செயற்பாடுகளை தொடர்வதாக அமைந்திருந்தது. Tower Amari க்கான piling பணிகள் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், இறுதிக்கட்டத்தின் போது, முதலாவது மற்றும் இரண்டாம் கட்ட முன்னைய நிர்மாணங்களான Brielle மற்றும் Cosmos Towers ஆகியவற்றை போல அட்டவணைக்கமைய நிர்மாணிக்கப்படும்.

ரூ.35 மில்லியனிலிருந்து ஆரம்பிக்கும் 2 மற்றும் 3 படுக்கையறைகளை கொண்ட தொடர்மனைகளை கொண்டதாக இந்தத் திட்டம் அமைந்திருக்கும். கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு புரட்சிகரமான Prime MAX சாத்தியமான திட்டத்தின் பலன்களை அனுபவிக்க முடியும். ரூ.175,000 எனும் மாதாந்த கொடுப்பனவில் கனவு இல்லத்தை பெற்றுக் கொள்வதற்கும், சொகுசான வசிப்பிடத்தை அணுகுவதற்கும் வாய்ப்பை வழங்கும்.

Tower Amari இன் அறிமுகத்தினூடாக, சொகுசு, நிலைபேறாண்மை மற்றும் சமூகம் ஆகியவற்றுடனான அதிசிறந்த வசிப்பிட பகுதிகளை ஏற்படுத்தும் Prime Residencies இன் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விலைமதிப்பு நிறைந்த திட்டத்தின் இறுதி அங்கமாக அமைந்துள்ள Tower Amari இன் பிரத்தியேகமான வடிவமைப்பு மற்றும் சூழல் பொறுப்புணர்வு ஆகியன, இலங்கையில் சொகுசான வசிப்பிடத்துக்கான




வரைவிலக்கணமாக அமைந்திருக்கும்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் பிரதான முக்கிய பகுதிகளான போர்ட் சிற்றி மற்றும் தாமரை கோபுரம் ஆகியவற்றை இலகுவாக சென்றடையக்கூடிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் Colombo Border திட்டம் அமைந்துள்ளது. பிரதேசத்தில் காணப்படும் அதிகளவு நாடப்படும் வதிவிட பகுதியாக தன்னை கட்டியெழுப்பியுள்ளது. 6.5 ஏக்கர் நிலப்பகுதியில் அமையப்பெறும் இந்தத் திட்டம் நிலைபேறான விருத்தியை காண்பிப்பதுடன், 25% ஆன காணிப் பகுதி மாத்திரம் நிர்மாணத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 75% ஆன பகுதி திறந்த வெளிகளாக, ஜொகிங் பகுதிகள், கஃபேகள், சந்திப்பு நிலையங்கள், நிகழ்வு மண்டபங்கள், நீச்சல் தடாகங்கள் மற்றும் இதர வசதிகள்பலதை கொண்டிருக்கும்.


சூழலுக்கு நட்பான அலங்கார வடிவமைப்புகளை பின்பற்றுவதனூடாக, திட்டத்தின் நிலைபேறாண்மைக்கான அர்ப்பணிப்பை Tower Amari பேணும். பொதுவான பகுதிகள் மற்றும் வாகன தரிப்பிட பகுதிகளுக்கு சோலர் வலுவில் இயங்கும் ஒளியூட்டலை கொண்டிருக்கும். கழிவு நீர் முகாமைத்துவ கட்டமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆற்றல் வசதிகள் போன்றனவும் அடங்கியிருக்கும்.

அலங்கார வடிவமைப்பில் இயற்கையாகவே காற்றோட்டப் பகுதிகள் அடங்கியிருப்பதுடன், பல பகுதிகளில் இயந்திரவியலை பின்பற்ற காற்றோட்டத்தை வழங்குவதற்கான தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. நிலைபேறான போக்குவரத்து தெரிவுகளில் நாட்டம் அதிகரித்து வரும் நிலையில், தூர நோக்கில், மின் வாகன சார்ஜ் செய்யும் உட்கட்டமைப்பு வசதிகளும் அடங்கியிருக்கும்.

The Colombo Border திட்டத்தின் பூர்த்தி செய்யப்படும் காலஎல்லை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், Tower Brielle மற்றும் Tower Cosmos ஆகியன 2027இல் பூர்த்தி செய்யப்படும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Tower Amari இன் நிர்மாணப் பணிகள் 2028இல் பூர்த்தி செய்யப்படும்.

## மனைப்பொருளியல் அலகு:

# யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு முத்திரை



ஜெயக்குமார் டிலக்ஸ்சிகா

பல்கலைக்கழக கல்வி என்பது வெறும் பட்டம் பெறுவது மாத்திரமல்ல. அது அறிவார்ந்த தேடல் மற்றும் சமூக பங்களிப்பிற்கான பயணம் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அதற்கிணங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப் பிரிவில் மனைப்பொருளியல் பட்டப்படிப்பை வழங்கும் இலங்கையின் தனித்துவமான கல்வி நிறுவனமாகத் திகழ்கின்றமை சிறப்பு வாய்ந்த ஒரு விடயமாகும்.

கலைப்பீடத்தின் கீழ் கற்பிக்கப்படும் மனைப்பொருளியல் பாட அலகானது தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத பல்துறை சார்ந்த அறிவை வழங்கும் ஒரு முக்கியமான கற்கை நெறியாகும். குறிப்பாக உணவு, ஊட்டச்சத்து, மனை முகாமைத்துவம், ஆடை நிர்மாணம், வடிவமைப்பு, தொழில் முயற்சியாண்மை, மனித விருத்தி மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி, கிராமிய அபிவிருத்தி போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியிருப்பதன் மூலம் இப்பாட அலகின் பெறுமதி மேலும் அதிகரிக்கின்றது.

மனைப்பொருளியலில் உணவுப் பாதுகாப்பு, போசாக்காகு, சமைக்கும் முறைகள், பதப்படுத்தல், சுகாதாரம் மற்றும் உணவுப் பொருட்களின் விலை நிர்ணயம் போன்ற விடயங்களை இப்பாடத்தினூடாக மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

இது, தனி நபர்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிக்கவும், குடும்பங்களுக்குப் போசாக்கான உணவுத் தெரிவினை வழங்கவும் உதவுகிறது . மேலும், வளர்ந்து வரும் உணவுத் தொழில் துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், உணவு வணிகங்களை வெற்றிகரமாக நடத்தவும், உணவு உற்பத்தித் துறை சார்ந்த தொழில் முனைவுகளில் ஈடுபடவும் இப்பாடத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் கோட்பாட்டு அறிவு, பிரயோக அறிவு போன்றன மிகவும் உதவியாக அமைகின்றன.

அதிலும் குறிப்பாக இப்பாடப் பிரிவில் ஒரு முக்கிய பகுதியாகக் கற்பிக்கப்படும் பருவ கால உணவுகளைப் பதப்படுத்தல் எனும் விடயம் மாணவர்கள் எதிர்காலத்தில் ஒரு சுய தொழிலை ஆரம்பித்து பொருளாதார ரீதியாக அதிகளவான இலாபத்தை ஈட்டக்கூடிய வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதுடன், பருவ காலங்களில் உணவுப்பொருட்கள் வீணடைவதை தடுக்க ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அமைகிறது. இலங்கை போன்ற விவசாயம் சார்ந்த நாட்டில் உணவு உற்பத்தியின் முக்கியத்தும், உணவுப் பாதுகாப்பின் அவசியத்தையும் இப்பாட அலகு உணர்த்துகிறது.

ஊட்டச்சத்து என்பது ஆரோக்கியமான வாழ்விற்கு அடிப்படையாகும். இப்பாட அலகில் மாணவர்கள் பல்வேறு வகையான உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் உடலில் அவை ஏற்படுத்தும் விளைவுகள் போன்ற விடயங்களை கற்கின்றனர். மேலும் சமனிலையான உணவு, போசணைக் குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள் மற்றும் வயதுப் பிரிவிற்கேற்ற வகையில் உணவு வேளைகளை திட்டமிடல் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

அத்துடன், தற்போதைய வாழ்க்கை முறை மாற்றங்களால் அதிகரித்து வருகின்றன. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள் சார்ந்த அறிவும் இப்பாடத்தின் மூலம் மாணவர்களுக்குப் புகட்டப்படுகின்றது. இது தனி நபர்கள் மற்றும் குடும்பங்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளவும், நோய்கள் ஏற்படாமல் தடுக்கவும் உதவுகிறது. இலங்கையில் அதிகரித்து வரும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்தவும், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து பற்றிய அறிவு இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடத்தின் மற்றுமொரு முக்கிய பகுதியாகக் காணப்படும் மனை முகாமைத்துவம் என்பது வளங்களைத் திறம்படப் பயன்படுத்துவது தொடர்பான ஒரு கற்கை ஆகும். வரையறுக்கப்பட்ட வளங்களை எவ்வாறு வினைத் திறனாக நிர்வகிப்பது? என்பதை இப்பாட அலகு மாணவர்களுக்கு கற்பிக்கின்றது. வீட்டுப் பராமரிப்பு, வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், சேமிப்பு மற்றும் முதலீடு, மனை அலங்காரம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்குகின்றன. சிறந்த மனை முகாமைத்துவத் திறன்கள் குடும்பங்களின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும், ஒட்டுமொத்த நல்வாழ்விற்கும் உதவுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தைக் கொண்டு குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், எதிர்காலத்திற்கான திட்டமிடல்களை மேற்கொள்ளவும் இந்த அறிவு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

ஆடை நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு என்பது ஒரு கலை ஆகும். இப்பாட அலகில் மாணவர்கள் ஆடைகளின் அடிப்படை வடிவமைப்பு, துணிகளின் வகைகள், தைக்கும் முறைகள் மற்றும் ஆடைப் பராமரிப்பு போன்ற விடயங்களையும் அத்துடன் கைத் தையல்கள் என்ற பிரிவிற்குள் அடிப்படை, அலங்கார தையல்கள் தையல், நுட்ப முறைகள் போன்றவற்றையும் கற்றுக் கொள்கின்றனர். இவ்விடயங்கள் அனைத்தும் கோட்பாடு மற்றும் செயல்முறை அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது.

இதன் மூலம் மாணவர்கள் அனுபவ அறிவினையும் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. இது மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமான ஆடைகளைத் தெரிவு செய்யவும், தமது தேவைகளுக்கு ஏற்ப ஆடைகளை வடிவமைத்துத் தைத்துக்கொள்ளவும் உதவுகிறது. மேலும், ஆடை உற்பத்தி மற்றும் வடிவமைப்புத் துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெறவும், சொந்தமாக ஆடை வணிகங்கள் ஆரம்பிக்கவும் இந்த அறிவு பயனுள்ளதாக அமைகின்றது. அத்துடன் தற்காலங்களில் ஆடை வடிவமைப்பு என்பது ஒரு இலாபம் ஈட்டக்கூடிய வணிகமாக வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஒரு அடிப்படை அறிவு மற்றும் வழிகாட்டுதல்களையும் மனைப்பொருளியல் பாடம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை நாட்டினைப் பொறுத்தவரையில் தற்போதைய காலகட்டத்தில் அரசாங்க வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு சவால் நிறைந்த விடயமாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பட்டப்படிப்பினைப் பயிலும் மாணவர்களுக்கு தொழில் முயற்சியாண்மை தொடர்பான அறிவினை வழங்குதல் என்பது தற்போதைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானதாகும். அந்த வகையில் மனைப் பொருளியல் பாட அலகில் ஒரு பிரிவாகக் கற்பிக்கப்படும் தொழில் முயற்சியாண்மை எனும் பாடமானது மாணவர்களிடையே சுயதொழில் தொடங்குவதற்கான திறன்களையும், மனப்பாங்கையும் வளர்க்க உதவுகிறது. அத்துடன் இப் பாடத்தின் ஊடாக சிறிய அளவிலான வணிகங்களை ஆரம்பித்தல், சந்தைப்படுத்தல் உத்திகள், நிதி முகாமைத்துவம், வள முகாமைத்துவம் மற்றும் வணிக நடைமுறைகள் போன்ற விடயங்களும் கற்பிக்கப்படுகின்றன. இது மாணவர்களின் வேலையில்லாப் பிரச்சனைக்கு ஒரு சிறந்த தீர்வாகவும் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு பங்களிப்பாகவும் அமைகிறது.

மனைப்பொருளியல் பாடத்திட்டத்தில் மனித விருத்தி தொடர்பாகக் கற்பிக்கப்படுகின்றமையும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயம் ஆகும். மனித விருத்தி என்பது மனிதனின் வாழ்க்கை வட்ட பருவத்தில் ஏற்படும் உடல், உள, சமூக மற்றும் அறிவு சார்ந்த மாற்றங்களை உள்ளடக்கியது. இப்பாட அலகில் கருத்தரிப்பிலிருந்து முதுமை வரை மனிதனின் வளர்ச்சி நிலைகள், ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தேவைகள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது மாணவர்கள் தங்களைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் புரிந்து கொள்ளவும், வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கவும் உதவுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவும், சமூகத்தில் சிறப்பாகப் பங்களிக்கவும் இந்த அறிவு பயனுடையதாகக் காணப்படுகின்றது.

மிக முக்கியமாக இப்பாடத் திட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நமது சமூகத்தில் விசேட தேவையுடையவர்கள் தொடர்பான விழிப்புணர்வு என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அந்த வகையில், இப்பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு விசேட தேவையுடைய பிள்ளைகளின் உளவியல், அவர்களின் கற்றல் முறைகள், அவர்களுக்கு வழங்கப்படும் விசேட கல்வி முறைகள் மற்றும் அவர்களை சமூகத்தில் ஒருங்கிணைப்பதற்கான உத்திகள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இது சாதாரண மானவர்களுக்கு விசேட தேவையுடையவர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு உதவவும் ஒரு வாய்ப்பை வழங்குகின்றது. மேலும், இப்பாடம் சார்ந்து முன்னெடுக்கப்படும் கள ஆய்வுகள் மாணவர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மற்றும் நல் வாழ்வில் அக்கறை கொண்டு செயல்படவும், சமூகத்தினருக்கு ஒரு விழிப்புணர்வினை வழங்கவும் தூண்டுதலாக அமைகிறது.

அத்துடன் எமது நாட்டின் உற்பத்தித் துறையில் மிக முக்கியமான பங்கினை வகிக்கும் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் மனைப்பொருளியல் பாட அலகில் முக்கியத்துவம் பெறுகின்றன. கிராமிய மக்களின் பொருளாதார நிலை, விவசாயம் மற்றும் சிறு கைத்தொழில்களின் முக்கியத்துவம், கிராமப்புற அபிவிருத்திக்கான திட்டங்கள் மற்றும் பெண்களின் வறுமை நிலை, உற்பத்தித் துறையில் பெண்களின் பங்கு போன்ற விடயங்கள் இப் பாடத்தின் ஊடாக ஆராயப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாத்திரம் பட்டப்படிப்பின் ஓர் அங்கமாகக் காணப்படும் மனைப்பொருளியல் பாட அலகானது வெறுமனே வீட்டு நிர்வாகம், உணவும் போசணையும் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவை மட்டும் வழங்குவதோடு நின்று விடாமல் தனி நபர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடம் பல்துறை சார்ந்து வடிவமைக்கப்பட்டுள்ளமையினால் மாணவர்களுக்கு ஒரு பரந்த அறிவையும், திறன்களையும் வழங்குகின்றது.

இதன் மூலமாக பொறுப்புள்ள பிரஜையாகவும், சமூகத்தில் பயனுள்ள பங்களிப்பாளர்களாகவும் உருவாக முடியும். அத்துடன் தொழில் துறையில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளவும் இப் பாடம் ஒரு களம் அமைத்துக் கொடுக்கின்றமை சிறப்பான விடயமாகும்.

நாட்டின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு இப் பாட அலகு ஒரு விலைமதிப்பற்ற சொத்தாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.




# இங்கிலாந்து பிறீமியர் லீக்:
# போர்ண்மெத்திடம் தோற்றது ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (03) நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியில் 1-2 என்ற கோல்கணக்கில் ஆர்சனல் தோற்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை டெக்லான்றைஸ் பெற்றதோடு, போர்ண்மெத் சார்பாக டீன்ஹுய்ஜிசென், இவான்சிலன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்ளைப் பெற்றனர்.

இந் நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற இப்ஸ்விச்டெளணுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியது. எவெர்ற்றன் சார்பாக பெட்டோ, டிவைட்மக்நீல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப்பெற்றனர். இப்ஸ்விச்டெளண் சார்பாக ஜூலியோ என் சிஸ்கோ, ஜோர்ஜ் ஹிர்ஸ்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப்பெற்றனர்.



இந்தியா

## திடீர் பயிற்சியில் இந்திய போர் கப்பல்கள்

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் பதட்டம் உருவானபோது அரபிக் கடலில் அக்ரான் என்ற பெயரில் போர் பயிற்சிகள் நடத்தப்பட்டது. தற்போது மீண்டும் அரபிக் கடலில் இந்தியப் போர் கப்பல்கள் திடீர் பயிற்சியில் ஈடுபடத் தொடங்கி உள்ளன.

அரபிக் கடலின் பல்வேறு பகுதிகளில், சனிக்கிழமை (3) இந்தியப் போர் கப்பல்கள் அணிவகுத்துப் போர் பயிற்சியைத் தொடங்கின.

இந்த போர் பயிற்சி தொடர்பாக பிரதமர் மோடியை சந்தித்து கடற்படை தளபதி, சனிக்கிழமை (3) நீண்ட விளக்கம் அளித்துள்ளார். எனவே தற்போது அரபிக் கடலில் நடந்து வரும் இந்தியப் போர் கப்பல்களின் போர் ஒத்திகை பயிற்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எதிர்வரும் 7ஆம் திகதி வரை 5 நாட்களுக்குத் தொடர்ந்து இந்த போர் ஒத்திகை பயிற்சி நடைபெறும் என்று இந்திய கடற்படை அறிவித்துள்ளது. போர் ஒத்திகை எப்படி நடக்கிறது என்கிற தகவல் கள் வெளியிடப்படவில்லை.

என்றாலும் இந்திய கடற்படை கப்பல்கள் நீண்டதூர தாக்குதலுக்கு தங்களைத் தயார்ப்படுத்தும் வகையில் பயிற்சி நடப்பதாகத் தெரிய வந்துள்ளது. குறிப்பிட்ட இலக்குகளை மிக மிகத் துல்லியமாகத் தாக்கும் பயிற்சிகளும் நடந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்தியக் கடற்படை போன்று வட மண்டலத்தில் இந்திய விமானப்படையும் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் இடையே நிலவும் போர் பதட்டம் தொடர்ந்து நீடித்தபடியுள்ளது.

எனவே இந்தியா தாக்குதல் நடத்தினால் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம் என்று பாகிஸ்தான் கூறியபடி உள்ளது. கடந்த 2 தினங்களாகப் பாகிஸ்தான் இராணுவத்தினர் அதிகளவு ராடார் கருவிகளை எல்லைப் பகுதிகளுக்குக் கொண்டு வந்து குவித்துள்ளனர்.

குறிப்பாக ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் இந்தியா ஊடுருவும் என்று எதிர்பார்த்துப் பல இடங்களில் பாகிஸ்தான் போர் விமானங்களை நிறுத்தி இருக்கிறது.

இந்தியா

### ஆயுத உற்பத்தி தொழிற்சாலை

## ஊழியர்களின் விடுமுறை இரத்து

பயங்கரவாதிகள் மீதான தாக்குதல் ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக இந்தியாவில் உள்ள ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு நீண்ட நாள் விடுப்பு உடனடியாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் ஆயுதங்கள் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலம் புனேவில் இந்தியப் போர் விமானங்களில் பயன்படுத்தப்படும் ரொக்கெட் குண்டுகள், வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் பீரங்கிகளில் பயன்படுத்தப்படும் குண்டுகளும் அந்த நகரில் உள்ள ஆயுத தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன.

இந்த தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 7 ஆயிரம் பேருக்கு விடுமுறை நீட்டிப்பு கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இந்தியா முழுவதும் ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளில் உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன



### ஐ.பி.எல்:

## சென்னையை வென்றது பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பெங்களூருவில் சனிக்கிழமை(03) நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

ஸ்கோர்விவரம்: நாணயச் சுழற்சி: சென்னை பெங்களூரு: 213/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: கோலி 62 (33), ஜேக்கப் பெத்தெல் 55 (33), றொமாரியோ ஷெப்பர்ட் ஆ.இ 53 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷபத்திரண 3/36 [4], நூர் அஹ்மட் 1/26 [4])

சென்னை: 211/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஆயூஷ் மாத்ரே 94 (48), இரவீந்திர ஜடேஜாஆ.இ 77 (45) ஓட்டங்கள். பந்து வீச்சு: லுங்கி என்கிடி 3/30 [4], குருனால் பாண்டியா 1/24 [3])

போட்டியின் நாயகன்: றொமாரியோ ஷெப்பர்ட்

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

## றபாடாவுக்கு தற்காலிக தடை

பொழுது போக்கு போதைப்பொருள் பாவித்தது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்ட தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாலர் ககிஸோ றபாடா, தற்காலிக தடையொன்றை எதிர்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த வகையிலேயே இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்)கடந்த மாதம் மூன்றாம் திகதி றபாடா விலகியிருந்தார். அந்நேரத்தில் தனிப்பட்ட விஜயமாக தென்னாபிரிக்காவுக்குச் சென்றதாக றபாடாவின் ஐ.பி.எல். அணியான குஜராத் டைட்டான்ஸ் தெரிவித்திருந்தது.



தென்னாபிரிக்க உள்ளூர் இருபதுக்கு-20 தொடரில் இவ்வாண்டு ஜனவரி தொடக்கம் பெப்ரவரி வரையில் பங்கேற்கும் போதே இப்பாவனை இடம்பெற்றதாக அறியவருகிறது.

## அக்கரைப்பற்று மைதானத்துக்கு மின்னொளி


அஸ்லம்.எஸ்.மௌலானா

அக்கரைப்பற்று விளையாட்டு மைதானத்திற்கு மின்னொளியூட்டும் வேலைத்திட்டம் அக்கரைப்பற்று மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகிறது.

இரவு வேளையில் இருள் சூழ்ந்து காணப்படும் இந்த மைதானத்தில் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக விளையாட்டுக்கழகங்களும் பொதுமக்களும் மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்ததுடன் இம் மைதானத்திற்கு மின்விளக்குகளை பொருத்தி, ஒளியூட்டுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து ஆணையாளர் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக மாநகர சபையின் சொந்த நிதியின் மூலம் மின்னொளியூட்டும் வேலைத்திட்டம் வெள்ளிக்கிழமை (02) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் அங்கு புதிதாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு, பிரகாச மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



பாகிஸ்தான்

### பாகிஸ்தான் இராணுவத்தில்

## ஆயுத பற்றாக்குறை?



இந்தியாவுடனான பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், பாகிஸ்தான் இராணுவத்தில் கடுமையான ஆயுத பற்றாக்குறை உள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானின் ஆயுத தொழிற்சாலையானது, இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களை விநியோகித்து வருகிறது.

ஆனால், கவச பிரிவு வாகனங்கள் மற்றும் பீரங்கி வாகனங்களுக்குத் தேவையான எறி குண்டுகள் போதிய அளவில் இல்லை. எம்.109 ஹவிட்ஜர்ஸ் ரக பீரங்கிகளுக்கு வேண்டிய எறி குண்டுகளும், பி.எம்.-21 சாதனங்களுக்குத் தேவையான ரொக்கெட்டுகளும் போதிய அளவில் இல்லாத சூழலில், இந்தியாவின் தாக்குதலை அந்நாட்டு இராணுவம் எதிர்கொள்வது என்பது திறனற்ற ஒன்றாகவே உள்ளது.

உலகளாவிய தேவையை முன்னிட்டு வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விநியோகித்து விட்டு உள்நாட்டுக்கு வேண்டிய ஆயுதங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடாகவுள்ளது.

இதன்படி, உக்ரைனுக்கு பீரங்கி உள்ளிட்ட ஆயுதங்களைக் கொடுத்து விட்டு, பாகிஸ்தானின் கையிருப்பில் குறைந்த அளவே ஆயுதங்கள் உள்ளன என சமூக ஊடக தகவல்களும் தெரிவிக்கின்றன.

இதுபோன்று முக்கியத்துவம் வாய்ந்த வெடிபொருட்கள் பற்றாக்குறையால், பாகிஸ்தான் இராணுவம் ஒரு கட்டத்தில் அச்சமடைந்து உள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றியும் மற்றும் வேறு சில விசயங்கள் பற்றியும் கடந்த 2ஆம் திகதி நடந்த சிறப்புப் படைகளின் தளபதிகளுக்கான மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுள்ளன.

இதே விசயங்களை முன்னாள் இராணுவ தலைமை தளபதி குவாமர் ஜாவித் பஜ்வாவும் இதற்கு முன்பே ஒப்புக்கொண்டார். இந்தியாவுடன் நீண்டகால மோதலில் ஈடுபட போதிய ஆயுதங்கள் இல்லாமல் பற்றாக்குறையான சூழலிலும், பொருளாதார வலுவற்றும் பாகிஸ்தான் உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், இந்தியா தாக்கினாலும் அதனை எதிர்க்க போதிய வெடிபொருட்கள், ஆயுதங்கள் வசதி இல்லாத நாடாகவே பாகிஸ்தான் உள்ளது.

துனிசியா

## முன்னாள் பிரதமருக்கு சிறை

துனிசியா நாட்டின் முன்னாள் பிரதமருக்கு, 34 ஆண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 முதல் 2014 வரை துனிசியாவின் பிரதமராகப் பதவி வகித்தவர் அலி லராயோத். இவர் பயங்கரவாதத்திற்கு ஆதரவாக செயற்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக 2022ஆம் ஆண்டு அலி லராயோத் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிரியாவில் போரிடம் துனிசியாவில் இருந்து ஆயுதக் குழுவினரை அனுப்பி வைத்ததாக அலி லராயோத் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில், இந்த வழக்கில் அலி லராயோத் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து, 34 ஆண்டு காலம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அதேவேளை, எதிர்க்கட்சியின் குரலை நசுக்கவே அலி லராயோத் மீது பொய் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், தற்போதைய அதிபர் கயிஸ் சையது எதிர்க்கடைகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 05, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.